# மெட்ரோ ரயில் பாதைக்கு ஆய்வு



**சென்னை, ஆக. 30–**

இரண்டாவது திட்ட மெட்ரோ ரயில் பாதைக்கு, புரசைவாக்கத்தில் ஆய்வு பணி துவங்கியது.

மெட்ரோ ரயில் பாதை இரண்டாவது திட்டத்தில், 79 ஆயிரத்து, 961 கோடி ரூபாய் செலவில், மாதவரம் – சிறுசேரி, மாதவரம் – சோழிங்கநல்லூர், கோயம்பேடு – கலங்கரை விளக்கம் இடையே, 107.55 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது.

இப்பாதைகளுக்கு தேவையான நிலம் மற்றும் மண் ஆய்வு பணிகள், இரண்டு மாதங்களாக துரிதமாக நடந்து வருகின்றன.

மாதவரம் – சிறுசேரி சிப்காட் வரை அமைக்கப்பட உள்ள, மெட்ரோ ரயில் பாதைக்கு, தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களில், மண் ஆய்வு மற்றும் நிலம் கையகப்படுத்துவதற்கான, ஆரம்பக்கட்ட பணிகள் நடந்து வருகின்றன.

புரசைவாக்கம் – சூளை சந்திப்பில், தற்போது ஆய்வு பணி துவங்கியுள்ளது. இதற்காக, அறிவிப்பு பலகை வைக்கப்பட்டு, மண் ஆய்வு நடந்து வருகிறது.